**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S. No.74 of 2024

Deposition of D.W.1

Name of the Witness: திரு.சரவணன்

Date : 16.10.2025

## குறுக்கு விசாரணை

1. என் அப்பா பெயர் கோவிந்தன் (எ) சுருட்டையன். என் தாத்தா பெயர் பெருமாள். அவரை வினையன் என்றும் கூப்பிடுவார்கள். என் பாட்டி பெயர் கண்ணியம்மாள். வினையன் (எ) பெருமாளுக்கு எத்தனை வாரிசுகள் என்றால் என் அப்பா கோவிந்தன் (எ) சுருட்டையன், திருப்பதி, வெள்ளச்சி ஆகும். வினையன் (எ) பெருமாளுக்கு கொளகத்துரில் வீடு மட்டும் உள்ளது. என் தாத்தா என் அப்பாவிற்கு வீடு கொடுத்தார், என்னுடைய சித்தப்பாவிற்கு என்ன சொத்துக்கள் கொடுத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது.

2. என் அப்பாவிற்கு முதல் மனைவி பெயர் தஞ்சையம்மாள், இரண்டாவது மனைவி பெயர் சிவகாமி ஆகும். என் அப்பாவிற்கு முதல் மனைவியின் மூலமாக பிறந்தவர்கள் வாதிகள் தான் என்றால் சரிதான். என் தாயார் சிவகாமி என்னுடன் தான் இருக்கிறார் என்றால் சரிதான். என் அப்பா, என் அப்பாவின் இரண்டாவது மனைவி சிவகாமிக்கு மூலமாக நானும், 3ம் பிரதிவாதி புஷ்பாவும் வாரிசுகள் ஆகும். வாதிகளுக்கு என் அப்பா திருமணம் செய்து வைத்தார். வாதிகள் திருமணத்தின் போது நான் பிறக்கவே இல்லை. என்னுடைய பிறந்த தேதி 17.04.1977 ஆகும். என் அப்பா 1959 மற்றும் 1962 சொத்துக்களை வாங்கினார் என்றால் சரிதான். என் அப்பா அம்மா சிவகாமி 1962 க்கு

பிறகு தான் திருமணம் செய்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். என் தக்கப்பானார் பெயரில் உள்ள கிரைய பத்திரத்தின் அசலை தாக்கல் செய்யவில்லை. சான்றிட்ட நகலை தான் தாக்கல் செய்துள்ளேன். அதன் அசல் ஆவணங்கள் என்னிடம் உள்ளது.

3.வாதிகள் பாகபிரிவினை கேட்டு OS.121/2012 மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் தருமபுரியில் வழக்கு போட்டு இருந்தார்கள் என்றால் சரிதான். வாதி தேவராஜ் என்ற வழக்கறிஞர் மூலமாக சட்ட அறிவிப்பு அனுப்பி, அவர் மூலமாக வழக்கு 6 ல் 4 பாகம் வேண்டும் என்று கேட்டு தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். நான் தற்போது எனக்காக இந்த வழக்கை நடத்தும் வழக்கறிஞர் கண்ணன் மூலமாக நான் பதில் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். நான் அனுப்பிய 24.09.2008 பதில் அறிவிப்பில் என் அப்பா எனக்கு உயில் எழுதி வைத்திருக்கிறார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த உயிலின் அசல் என்னிடம் உள்ளது, அதை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. 11.02.2009 ல் என் அப்பா இறந்துபோனார் . உயில் எழுதி தேதியில் இருந்து 5 மாதத்தில் இறந்துவிட்டார் என்றால் சரிதான். வாதிகள் என் அப்பா இறந்தபின்பு தான் OS.121/2012 வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். நீண்ட காலமாக என் அப்பா உடல் நிலை சரியில்லாமல் இருந்தார் என்றால் இறப்பதற்கு ஒரு ஆண்டு காலமாக உடல்நிலை சரியில்லாமல் இருந்தார், சின்ன சின்ன பிரச்சனைகளால் அவர் உடல் நிலை பாதிக்கப்பட்ட இருந்தது. உயிலை ஆஜர்படுத்த தயாராக உள்ளேன்.

4. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட பதில் உறையில் தான செட்டில்மென்ட் பத்திரம் எழுதி கொடுத்ததாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். எனக்கு

தானசெட்டில்மெண்டிற்கும் உயிலுக்கும் பெரியதாக வித்தியாசம் தெரியவில்லை. பிறகு தான் தெரிந்தது. இந்த வழக்கில் பதில் போடும்போது தான் ஆவணம் உயில் என்று தெரிந்துக்கொண்டேன். உயில் எழுதும்போது நான் போகவில்லை என் அப்பா தான் போனார். உயில் எழுதிய 10 முதல் 15 நாட்கள் கழித்து என் அப்பா கொடுத்தார். உயிலில் பச்சியப்பன் கொளகத்துார் கிராமம், சின்னதம்பி காமலாபுரம் கிராம் சாட்சியாக போடப்பட்டுள்ளது. இவர்கள் இருவரும் உறவினர்கள் என்றால் இல்லை, என் அப்பாவிற்கு நண்பர்கள். காமலபுரத்தை சேர்ந்த பிரதிவாதிகள் 6 முதல் 10 நபருக்கு தான் சொத்தை விற்றேன் என்றால் சரிதான். சாட்சி அசல் உயிலை அடுத்த வாய்தாவில் தாக்கல் செய்வதாக சொல்கிறார்.